பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 05 2024 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கருத்து சுதந்திரத்தை முடக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.
- பெரு நிறுவனங்களின் நலன்களுக்காகவே பிஜேபி அரசு செயல்பட்டுள்ளதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.
- தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில் நள்ளிரவில் ஏற்பட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.
- ஸ்லோவாக்கியா நாட்டின் பிரதமர் திரு. ராபர்ட் ஃபிகோ துப்பாக்கியால் சுடப்பட்டதில் உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
- ஃபெடரேஷன் கோப்பை தேசிய தடகள போட்டியில் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் ஹரியானாவின் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

கருத்து சுதந்திரத்தை முடக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் நேற்று மாலை அவர் சாலைப் பேரணியில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தார்.

பின்னர் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மகாராஷ்டிராவின் வளர்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

திரைப்படத் துறையில் மும்பை முக்கியப் பங்கு வகிப்பதாகவும், இத்துறையின் மேம்பாட்டுக்கு பிஜேபி அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நெருக்கடி நிலையை அமல்படுத்திய காங்கிரஸ் அரசு படைப்பாற்றல் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு மரியாதை அளிக்கவில்லை என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பெரு நிறுவனங்களின் நலன்களுக்காகவே பிஜேபி அரசு செயல்பட்டுள்ளதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

ஒடிசா மாநிலத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பொதுத்துறை நிறுவனங்களை பிஜேபி அரசு அதிக அளவில் தனியார்மயமாக்கியதாக குற்றம் சாட்டினார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தொழிலாளர் நலனிலும் பிஜேபி கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான ஊதியம் உயர்த்தப்படும் என்று திரு. ராகுல் காந்தி கூறினார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முந்தைய காங்கிரஸ் அரசு அக்கறை செலுத்தவில்லை என பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி நிர்மலா சீதாராமன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், காங்கிரஸ் அரசின் தவறான கொள்கைகள் மற்றும் முறையற்ற நிர்வாகத்தால் இந்தியா பலவீனமான பொருளாதாரமாக விளங்கியது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் நீண்டகால நலன்களை அக்கட்சி கருத்தில் கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

புலனாய்வு அமைப்புகளை பிஜேபி அரசு தவறாக பயன்படுத்துவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ஜெயராம் ரமேஷ், சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்றவற்றின் செயல்பாடுகளில் பிஜேபி அரசு தலையிடுவதாக குறை கூறினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இவற்றுக்கான அதிகாரங்கள் குறித்து மறுஆய்வு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்

தென் மாநிலங்களில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்றும் திரு. ஜெயராம் ரமேஷ் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் ஏற்றுமதி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 6 புள்ளி எட்டு எட்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைத் துறை ஏற்றுமதி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 60 புள்ளி நான்கு பூஜ்ஜியம் பில்லியன் டாலராக இருந்தது எனவும், இந்த ஆண்டு அது 64 புள்ளி ஐந்து ஆறு பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 25 புளிள 8 சதவீதமும், ரசாயனப் பொருட்கள் ஏற்றுமதி 16 புள்ளி ஏழு ஐந்து சதவீதமும், மருந்துப் பொருட்களின் ஏற்றுமதி 7 புள்ளி மூன்று ஆறு சதவீதமும் அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க 49 உயரதிகாரிகள் மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் வேல்முருகன், ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மாநிலத்தில் கடந்த ஆண்டில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் வகையில் காவல்துறையினருக்கு கூடுதல் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறி நீதிபதிகள் வழக்கை ஒத்திவைத்தனர்.

<<<<>>>>

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தோல்வியடைந்தவர்கள் துணைத்தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

ஜூன் ஒன்றாம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனவும், இதில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் சிறப்பு அனுமதி திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணைத் தேர்வுகள் ஜூலை 2ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில் நள்ளிரவில் ஏற்பட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

மதுராந்தகத்தை அடுத்த பழமத்தூர் அருகே திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த லாரி ஒன்றின் மீது தனியார் பேருந்து பின்புறமாக மோதியது.

இந்த விபத்தில் தனியார் பேருந்தில் பயணம் செய்த 4 பேர் உயிரிழந்ததாகவும், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால் அதை அகற்றுவது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி சென்னை கடற்கரைப் பகுதியில் நேற்று நடைபெற்றது.

இதில் பேரிடர் மேலாண்மை துறையினர், கடலோர காவல்படையினர், காவல்துறையினர் உள்ளிட்டோர் பங்கேற்றதாக தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் திறன் மேம்பாட்டு வல்லுநர் திரு. முருகானந்தம் தெரிவித்தார்.

<<<<>>>>

ஸ்லோவாக்கியா நாட்டின் பிரதமர் திரு. ராபர்ட் ஃபிகோ துப்பாக்கியால் சுடப்பட்டார்.

இதையடுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தமது ஆதரவாளர்கள் இடையே உரையாற்றிய நிலையில், அவரை நோக்கி அடையாளம் தெரியாத நபர் ஒருவர் ஐந்து முறை துப்பாக்கியால் சுட்டார்.

இதில் திரு. ஃபிகோவின் வயிற்றுப் பகுதியில் குண்டுகள் பாய்ந்தன.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டின் உள்துறை அமைச்சர் திரு. **Muthus Sutaj**, திரு. ராபர்ட் ஃபிகோவின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று கூறினார்.

இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்திற்கு அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் உள்ளிட்ட பல்வேறு உலக தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

சிங்கப்பூர் நாட்டின் புதிய பிரதமராக திரு. **Lawrence Wang** பொறுப்பேற்றுள்ளார்.

ஏற்கனவே பிரதமராக பதவி வகித்த லீ சியன் பதவி விலகியதை அடுத்து புதிய பிரதமராக திரு. வாங் பதவியேற்றுள்ளார்.

அவருக்கு அதிபர் திரு. தர்மன் ஷன்முகரத்னம் பதவிப்பிரமானம் செய்து வைத்தார்.

சிங்கப்பூரின் புதிய பிரதமருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திண்டுக்கல், தேனி, சிவகங்கை, மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்யும் என அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு, நிலக்கோட்டை, கொடைரோடு பகுதியில் பரவலாக கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்காசி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்தது.

கனமழை எச்சரிக்கையை அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விருதுநகர் மாவட்டத்தில் உதவி எண்ணை அறிவித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

ஃபெடரேஷன் கோப்பை தேசிய தடகள போட்டியில் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் ஹரியானாவின் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றார்.

ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அதிகபட்சமாக 82 புள்ளி இரண்டு ஏழு மீட்டர் ஈட்டி எறிந்து இந்தப் பதக்கத்தை வென்றார்.

கர்நாடகாவின் டி.பி. மானு இதில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற பின்பு தேசிய அளவிலான போட்டியில் நீரஜ் சோப்ரா பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

இதனிடையே ஆடவர் நீளம் தாண்டுலில் தமிழகத்தின் ஜெஸ்வின் ஆல்டரின் தங்கப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

குவஹாத்தியில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 144 ரன் எடுத்தது.

145 ரன் எடுத்தால் வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி, 18 புள்ளி 5 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 145 ரன் எடுத்து வெற்றியடைந்தது.

<<<<>>>>